**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 319/2013 P.W. 5/L.W.8**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | டாக்டர். திரு. பிரவின் | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 03.09.2024.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**2, 4, 5வது குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மை நீதியின் நலன் கருதி கு.வி.மு.ச 1973 பிரிவு 317(1)ன் கீழ் அனுமதிக்கப்படுகிறது. 1, 3 வது குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

**1. என்னுடைய பெயர் R.J. பிரவின்.** நான் தற்பொழுது மோரிஸ் மத்தியாஸ் மருத்துவமனையில் மயக்க மருந்து நிபுணராக பணிபுரிந்து வருகிறேன். அரசு மருத்துவமனை குளச்சலில் உதவி மருத்துவராக பணிபுரிந்த போது 16.11.2009ம் தேதி இரவு 08.20 மணி அளவில் செந்தில்குமார், த/பெ. லாசர், வயது 20, பனவிளை, வாணியக்குடி அஞ்சல் என்பவர் சிகிட்சைக்காக அரசுமரு்துதுவமனை குளச்சலுக்கு அவருடைய அம்மாவுடன் வந்தார்.

2. அவர் தன்னை தெரிந்த 2 நபர்களும், தெரியாத 3 நபர்களும் கம்பு கொண்டும் கை கொண்டும் அன்றையதினம் இரவு 07.00 மணி அளவில் பத்தறையில் வைத்து அடித்ததாக கூறினார். அவரை பரிசோதித்த போது அவருக்கு கீழ்கண்ட காயங்கள் காணபப்பட்டன.

காயம் 1. பரவலான வீக்க காயம் இடது தொடையின் நடுப்பகுதியில் காணப்பட்டது. தொட்டால் வலி இருப்பதாக கூறினார்.

காயம் 2. சிதைவு காயம் 3x 2 x 1/2 cm அளவில் வலது கண் புருவத்தில் காணப்பட்டது.

காயம் 3. சிதைவு காயம் 1x 1 x 1 cm அளவில் மேல் உதட்டில் காணப்பட்டது.

காயம் 4. பரவலான வீக்ககாயம் இடது கண் பகுதியில் காணப்பட்டது.

காயம் 5. சிராய்ப்பு காயம் 1/2 x 1/2 cm அளவில் வலது கண் பகுதியில் காணப்பட்டது.

காயம் 6. தலையில் வலி இருப்பதாக கூறினார்.

அவர் சுய நினைவுடன் காணப்பட்டார். அவரை நான் மேல்சிகிட்சைக்காக ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். அன்றைய தினமே இரவு 09.00 மணி அளவில் ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்கு இடது தொடை பகுதியிலும், தலைப்பகுதியிலும் நுண்கதிர் படம் எடுக்கப்பட்டது. அதில் எலும்பு முறிவு எதுவும் காணப்படவில்லை. கண் சிகிட்சை பிரிவில் கண் மருத்துவர் டாக்டர் ஜெயலதா பரிசோதித்ததில் அவருக்கு கொடுரகாயம் என்று சான்று அளித்துள்ளார்.

அவர் ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனையிலிருந்து 25.11.2009 அன்று சிகிட்சையிலிருந்து விடுவிக்கப்பட்டார். அவருக்கு ஏற்பட்ட காயங்களில் 4வது காயம் கொடுங்காயம் என்றும், மற்ற காயங்கள் சாதாரண காயங்கள் என்றும் சான்று அளிக்கப்பட்டது. **அந்த காயச்சான்று அ.சாஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார என்னை விசாரித்தார்கள்.

<u>பொதுவான குறுக்கு விசாரணை</u> :

**1.** நான் காவல்நிலையத்திற்கு உடனே தகவல் கொடுத்துவிட்டேன். காயம்பட்ட நபர் வந்தவுடன் நான் நிலையத்திற்கு தகவல் கொடுத்தேனா என்றால் பரிசோதனை முடிந்த பிறகு தான் கொடுத்தேன். நான் சொன்ன மேற்படி காயங்கள் ஒரு நபர் மதுபோதையில் வேகமாக வாகனத்தில் சென்று விபத்தை ஏற்படுத்திக்கொண்டால் ஏற்பட வாய்ப்பு உண்டு என்று சொன்னால் வாய்ப்பு உண்டு.

2. கண் மருத்துவர் என்ன பரிசோதனை செய்தார் என்று எனக்குத் தெரியாது. ஆவணங்களின் அடிப்படையில் தான் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் காயம்பட்ட நபரை நான் பரிசோதித்து சான்று வழங்கவில்லை என்றால் சரியல்ல. நான் தான் பரிசோதித்தேன். நான் தான் சான்று வழங்கினேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். என்னை எப்போது போலீசார் விசாரித்தார்கள் என்றால் ஞாபகமில்லை.

குறுக்கு விசாரணை – முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.